# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 47 — 1973 පෙබරවාරි 15 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.02.15

47 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 173 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 176 | எல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### *கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு*

*ஒவ்வொன்றும் 3,000 கொண்ட 3 கூறுகளும்; 3,934 கொண்ட ஒரு கூறும் எல்லாமாக 12,934 வெற்றுச் சீமெந்துப் பைகளை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1973.03.08 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.*

*கணியப் பட்டியலில் காட்டப்பட்டுள்ளவாறான சீமெந்துப் பைகள் கிழமை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 11.00 மணிவரையும் சோதனைக்குக் கிடைக்கப் பெறும்.*

*1973.03.08 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப் படுவார்கள்.*

*கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் த்பாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச் சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.*

*மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.03.06 திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.*

**சி. லுடிகன்ஸ்,**
*கப்பற்றுறை ஆணையாளர்.*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,*
*கொழும்பு 1,*
*15.02.1973.*

*2-546—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47*

### முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

### சிவில் விமானப் போக்குவரத்துப் பகுதி

பணியாளர் உண்டிச்சாலை—பண்டாரநாயக்கா சர்வதேச விமானத்துறை

கட்டுநாயக்காவில் அமைந்துள்ள சர்வதேச விமானத்துறைக்கு மிகவண்மையில் உள்ள ஊர்திச்சாலை தடையில் ஓர் பணியாளர் உண்டிச்சாலையை நடாத்துவதற்காய கேள்விப்பத்திரங்கள் 5.3.73 ஆம் தேதி காலை 10 மணிவரை சிவில் விமானப் போக்குவரத்து அதிபர், த. பெ. 535, கொழும்பு 1 அவர்களால் ஏற்றுக்கொள்ளப் படும். அடுப்பு மூட்ட இடம் அனுமதிக்கப்படமாட்டாது. கேள்வி யாளர்கள் சமையலை அவர்கள் கொண்டு வரும் மண்ணெண்ணெய் அடுப்பில் அல்லது மின்னடுப்பில் செய்ய வேண்டும். மின்னியல் திணைக்களத்தால் வழங்கப்படும்.

உண்டிச்சாலை ஆரம்பிக்கும் காலத்திலிருந்து ஒரு வருட காலத் திற்கு இவ்வொப்பந்தம் செல்லுபடியாகும்.

கேள்வியாளர்கள் உண்டிச்சாலை நடாத்துவதில் குறைந்தது 5 ஆண்டு அனுபவமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். மேலும் உண் டிச்சாலையை வளமாக நடாத்தக்கூடிய தகுதியுள்ளவர்களெனச் சிவில் விமனப் போக்குவரத்து அதிபரைத் திருத்திப்படுத்தக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிபரின் அலுவலகத்திலோ அல்லது கொழும்புக்கு அப்பாலுள்ள கச்சேரிகளிலோ கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 25/- செலுத்தியதற்குரிய பற் றுச் சீட்டுச் சமர்ப்பிப்பதன் மூலம் 2.3.73 ம் தேதி நண்பகல் 12 மணி வரைக்கும் சிவில் விமானம் போக்குவரத்து அதிபரிட மிருந்து பெறக் கூடியதான படிவங்களிலேயே (இரு பிரதிகளில்) கேள்விப் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

சி. டபிள்யூ. எம். அப்பொன்சோ,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபர்.

த. பெ. 535,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
6 பெப்ரவரி 1973.

2-543—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### சிறு கைத்தொழில் திணைக்களம்

மேடையில் வைத்து நிறுக்கும் யந்திரங்கள், துணி அளக்கும் மடிக்கும் யந்திரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்குரிய கேள்விப் பத்திரங்களைத் தயாரிப்பவர்கள் அல்லது தயாரிப்பாளர்களின் பிரதிநிதிகளிடமிருந்து 1973.5.15 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

முழு விபரங்கட்கும் கேள்விப் பத்திரப் படிவங்கட்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் அதிபர்.

தொடர் இல: 3/1-(3/23)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.2.2.

2-544—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### சிறு கைத்தொழில் இலாகா

குருநாகலை தரம்பிரிக்கும் நிலையத்தில் கதவுகளுக்கும் ஜன்னல்க ளுக்கும் கம்பிவலை அடிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், தலை வர், கேள்விப்பத்திர சபை, சிறு கைத்தொழில் இலாகா அவர்க ளால் 1973.3.1 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

2. ஏதாவதொரு அரசாங்க இலாகாவில் கட்டிட வேலைக்கென ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 25 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்த கச்சேரியிலாவது செலுத்தி அதற் கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.2.28 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்தி ரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல: 3/1—(1/39)
சிறு கைத்தொழில் இலாகா,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.2.5.

2-657—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

சீனன்வாடியில் உள்ள தாங்கிகளுக்கு வீதிவழி அமைத்தல்.

மேற்கூறிய சேவைகட்கு பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி நிபந்தனைகள், விவரக்கூற்றுகள் மற்றும் வரைவுகள் ஆகியவைகளை, பண்டசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவல கத்தில் இருந்து மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

2-625/1—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

தரைக்கீழ் கவசவடம் (கேபிள்ஸ்) வழங்கல்

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்கு பொறியிட்ட கேள்வி கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி நிபந்தனைகளும் விவரக்கூற்றுக்களும் பண்டசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப் படும் காசு வைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக்கொள்ள லாம்.

கேள்விகள் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

2-625/2—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம்

*நிரப்பப்பட்ட 35 கலன் நிலக்கீல் தகரப் பீப்பாக்களை சபுகஸ் கந்தையில் உள்ள சுத்திகரித்தற்சாலையில் இருந்து கொலன்னுவா அந்தலை நிலையத்திற்கு ஏற்றியிறக்குவதற்கான கூறுவிலைகள்*

1973 ஆம் ஆண்டுக்காலத்திற்கு ஏற்றியிறக்கல் வசதிகளை வழங்கிக் கொள்வதற்குப் பொறியிட்ட கூறுவிலைகள் இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆகக் குறைந்தது மூன்று உலொறிகளைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மாத்திரம் கூறுவிலையை வழங்குவதற்குத் தகுதியுடையவர்களாவர். வெற்றிகரமான ஒப்பந்தக்காரர், அதாவது கொலன்னுவாவில் உள்ள நிறுவனசாலை முகாமையாளரினால் வேண்டப்படின், ஆகக் குறைந்தது நாளொன்றிற்கு 120 தகரப் பீப்பாக்கள் வீதம் நிரப்பப்பட்ட நிலக்கீல் தகரப் பீப்பாக்களை ஏற்றியிறக்க ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். இந்த அளவுடைய தகரப் பீப்பாக்கள் ஒழுங்காக வழங்கப்படும் என இக்கூட்டுத்தாபனம் உத்தரவாதமளிக்கவில்லை எனினும் நிறுவனசாலை முகாமையாளர் விரும்பின் குறைந்த அளவுடைய தகரப் பீப்பாக்களை ஏற்றியிறக்கும்படி வெற்றிகரமான ஒப்பந்தகாரர் வேண்டப்படுவர்.

ஏற்றியிறக்கற் செலவுகள் உட்பட "தகரப் பீப்பா ஒன்றிற்கு" என்ற அடிப்படையில் கூறுவிலைகள் அமைந்திருத்தல் வேண்டும்.

கூறுவிலைகள் பொறியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும், அல்லது பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் போடப்பட்டிருத்தல் வேண்டும்.

கூறுவிலைகள் 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆந் தேதி காலை 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

2-625/3—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு-5, கிருள வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1973.03.14 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை ஆண்களின் கறுப்புநிற தோல் சப்பாத்துக்கள் தயாரித்து வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

1973.03.13 ஆம் தேதி பி. ப. 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐயும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக்கட்டணமாக ரூபா 10/- ஐயும் காசாக பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்களை, கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்ட வேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து வழமையான வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக
உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வேரகரை,
பொறலஸ்கமுவை.

2-637—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### கட்டடத் திணைக்களம்

கொழும்புப் பகுதிக் கட்டுமான, பேணல் வேலைகளுக்கும் கட்டடச் சேர்ப்பு, திருத்தல் வேலைகளுக்கும் கட்டடப் பொருள்களை வழங்கல்

கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு மாவட்டங்களில் உள்ள கட்டடச் சாலைகள் கட்டடத் தானங்கள் ஆகியவற்றுக்குக் கீழே குறிப்பிடப்படும் கணியங்களில் கட்டடப் பொருள்களை வழங்குவதன் பொருட்டுக் கேள்விச் சபைத் தலைவரினால் கேள்விகள் பெற்றுக் கொள்ளப்படும். அன்னாரின் முகவரி கண்காணிப்பு எந்திரியின் அலுவலகம், கொழும்புப் பகுதி, கட்டடத் திணைக்களம், கொழும்பு 7. 1973 பெப்ரவரி மாதம் 28 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், கொழும்புப் பகுதி,கட்டடத் திணைக்களம், கொழும்பு 7 என்னும் முகவரியில் இருக்கும் கண்காணிப்பு எந்திரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் இணைப்படிவங்களில் அனுப்பப்படல் வேண்டும். கண்காணிப்பு எந்திரியிடமிருந்து சகல விவரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். கொழும்புப் பகுதிக் கண்காணிப்பு எந்திரியிடம் பதிவு செய்யப்பெற்ற கேள்விக்காரருக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். பதிவு செய்யப்பெற்ற கேள்விக்காரரின் நிரலை மேலே கூறப்பட்ட அலுவலகத்தில் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிட முடியும் கேள்விப் படிவங்களை வழங்குவதற்கான கடைசித் தேதி 1973, பெப்ரவரி 26 ம் தேதி திங்கட்கிழமை பி. ப. 2.30 மணி வரையிலாகும்.

3. கேள்விகள் பதிவு செய்யப்பெற்ற கடித உறைகளில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது கொழும்புப் பகுதி, கட்டடத் திணைக்களம், கொழும்பு 7 என்னும் முகவரியில் உள்ள கண்காணிப்பு எந்திரியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். சீலிடப்பட்டதும் இடது பக்க மேல் மூலையில் "கட்டடப் பொருள்களை வழங்குவதற்கான கேள்வி" என்று எழுதப்பட்டதுமான கடித உறைகளில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

4. 1973, மார்ச் மாதம் 5 ஆம் தேதி திங்கட்கிழமை மு. ப. 9.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விக்காரர்கள் அல்லது அவர்களின் தத்துவம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் போது பிரசன்னமாக இருக்கலாம்.

5. தெரிவு செய்யப்பெற்ற கேள்விக்காரர்கள் தாம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றிய கடிதம் கிடைக்கப்பெற்ற ஒரு வாரகாலத்தினுள் பொருள்கள் வழங்குவதை ஆரம்பித்து நான்கு மாதங்களுள் வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பெற்ற கேள்விக்காரர் தேவையான பொருள்களைப் பணிக்கப்பட்டவாறு வழங்க மறுத்தால் அல்லது வழங்கத் தவறினால் அவர் அரசின் தவறிழைத்த ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ஆளாவார்.

6. அரை ஆண்டுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் வருமாறு :

| | பொருள்கள் | அலகு | கொழும்பு கிழக்கு | கொழும்பு மேற்கு |
|---|---|---|---|---|
| 1. | செங்கல் | எண்ணிக்கை | 150,000 | 75,000 |
| 2. | ஆற்று மணல் | கீப்பு | 1,500 | 750 |
| 3. | நீறிய சுண்ணம்பு | புசல் | 2,000 | 750 |
| 4. | களிச்சுண்ணம்பு | புசல் | 750 | 750 |
| 5. | உடைகல் 6″ 9″ | கீப்பு | 20 | 30 |
| 6. | கல் 4″ அளவு | கீப்பு | 20 | 30 |
| 7. | கல் 2″ அளவு | கீப்பு | 75 | 75 |
| 8. | கல் 1″ அளவு | கீப்பு | 75 | 75 |
| 9. | கல் ¾″ அளவு | கீப்பு | 75 | 75 |
| 10. | கல் ½″ அளவு | கீப்பு | 20 | 30 |
| 11. | கடுமண் | கீப்பு | 100 | 75 |
| 12. | களிமண் | கீப்பு | 50 | 30 |
| 13. | பரல் | கீப்பு | 200 | 200 |
| 14. | சீமை ஓடுகள் | எண்ணிக்கை | 7,500 | 7,500 |
| 15. | முகட்டு ஓடுகள் | எண்ணிக்கை | 750 | 750 |
| 16. | ½ வட்ட ஓடுகள் | எண்ணிக்கை | 7,500 | 7,500 |
| 17. | மூங்கில் 30′—40′ | எண்ணிக்கை | 200 | 200 |
| 18. | லுனுமிடெல்லாப் பலகைகள் | நீள்அடி | 7,500 | 7,500 |
| 19. | சீலிங்குக் கட்டைகள் | நீள்அடி | 1,500 | 1,500 |
| 20. | சீலிங்குச் சித்திரஅச்சு.. | நீள்அடி | 750 | 750 |

குறிப்பு 1—கணியங்கள் அண்ணளவானவை ; அறிவித்தல் இல்லாமலேயே மாற்றப்படக் கூடியவை.

மனுநாயகம் குமாரசுவாமி,
கண்காணிப்பு எந்திரி,
கொழும்புப்பகுதி.

கண்காணிப்பு எந்திரியின் அலுவலகம்,
கட்டடத் திணைக்களம்,
த. பெ. இல. 1355,
கொழும்பு 7.

2-555—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### கச்சேரி, புத்தளம்

பின்வரும் கட்டு வேலைகளுக்கு/திருத்த வேலைகளுக்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1973.3.1 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக் கொள்வார்.

புத்தளம், சிலாபம் அரசினர் இல்லங்களுக்கு நீரடைப்பு மல கூடங்கள் கட்டுதல்

2. புத்தளம் அரசாங்க அதிபரிடம் 1973.2.28 ம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். புத்தளம் அரசாங்க அதிபரிடமிருந்து இவ்வேலைகள் தொடர்பான எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக் களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அங்கீகாரம் பெற்ற சங்கங்களும் மாத்திரம் கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதியுடையவராவர். ஒவ்வொரு ரூபா 10/- க்கும் கச்சேரிப் பற்றுச் சீட்டுகளைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை அனுப்பக் கருதுபவர்களுக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கிராம முன்னேற்ற சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

3. கடித உறைகளில் "அரசினர் இல்லங்களுக்கு நீரடைப்பு மல கூடங்கள் கட்டுதல் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 1973.3.1 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் புத்தளம் கச்சேரி அரசாங்க அதிபருக்கு கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இந்தத் திகதியில் இந்த நேரத்துக்கு பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. 1973.3.2 ம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் எல்லா கேள்விதாரர்களும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் வேலை நிறைவுக்கான ஒப்பந்த தொகையில் 5 சத வீதத்தை பிணை வைப்பாகச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். அங்ஙனம் அறிவிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் அவ்விதம் செய்யத் தவறுபவர் கேள்வி வைப்புப் பணத்தை இழப்பார்.

5. செய்து முடித்த வேலையின் 90 சத வீதம் வரை பணம் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதிப் பணமும் பிணை வைப்புப் பணமும் வேலை நிறைவெய்தியதிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் கொடுக்கப்படும்.

பீ. எஸ். விஜேவீர,
அரசாங்க அதிபர்,
புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம்.
1973.2.1.

2-550—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### சிறைச்சாலைப் பகுதி

குண்டசாலையில் உள்ள பல்லேகலை திறந்த வெளி சிறைச்சாலையில் வெற்றிச் சாக்குகள், வெற்றி டின்கள் ஏல விற்பனை

கீழ் குறிக்கப்பட்ட வெற்றி சாமான்களுக்கான கேள்விப் பத்திரங்கள் 1973.3.14 காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | வெற்றிச் சாக்குகள் (பின்னல்) ... | 1,500 |
| (2) | வெற்றிச் சாக்குகள் (ஒரிஜினல்) ... | 100 |
| (3) | உப்பு சாக்குகள் ... ... | 30 |
| (4) | வெற்றி ஈஸ்ட் டின்கள் (1 ரு) ... | 200 |
| (5) | பழுதான சாக்குகள் (ஒரிஜினல்) ... | 150 |
| (6) | மரக்கறி நெய் டின் தகரம் (4 கலன்) ... | 10 |
| (7) | மரக்கறி நெய் தகரங்கள் (56 ரு) ... | 100 |
| (8) | கோழித்தீன் உறைகள் ... ... | 250 |

கட்டுப்பணம் ரூபா 15.00 மேற்படி சிறைச்சாலை காரியாலயத்திலோ அல்லது எந்த கச்சேரியிலோ செலுத்தி ரசீதை கேள்விப் பத்திரத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். கேள்விப் பத்திர (போம்) விநியோகிக்கப்படமாட்டாது. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 14 தினங்களுக்குள் சாமான்களை அகற்றிக் கொள்ளல் வேண்டும். முழுத் தொகையும் உடனே செலுத்தல் வேண்டும். தவறுமாயின் தமது கட்டுப் பணத்தை இழப்பதுமல்லாமல் அரசாங்க கறுப்புப் பட்டியலில் தனது பெயர் பதிவு செய்யப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதும் தபால் மூலம் அறிவிக்கப்படும். கேள்விப் பத்திரத்தால் முழு சாமான்களுக்குமாக மொத்த விலையை குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலமே அல்லது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ இடப்படல் வேண்டும். கடிதத்தில் இடது பக்க உறையில் "வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிடல் வேண்டும். சாமான்களை கிழமை நாள்களில் காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 1.00 மணி முதல் 3.00 வரையும் சனிக்கிழமை நாள்களில் காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரையும் பார்வையிடலாம். திருத்தங்கள் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும். சாமான்களை தெரிவு செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது. தொகையாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1973.3.14 காலை 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விக்காரர்கள் தானோ அல்லது தனது உத்தரவு பெற்ற ஒரு ஏஜண்டையோ பிரசன்னமாய் இருக்கலாம்.

பி. டபிள்யு. பெரேரா,
சிறைச்சாலை அதிகாரி.

திறந்த வெளிச் சிறைச்சாலை,
பல்லேகலை,
குண்டசாலை.
22 ஜனவரி 1973

2-586—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு—ஏலவிற்பனை

இந்த அமைச்சின் களஞ்சிய அறையில் கிடக்கும் பின்வரும் தள்ளப்பட்ட பொருட்கள் 1973 பெப்பிரவரி 23 ஆம் திகதி காலை 10 மணிக்குப் பிரசித்த ஏலத்தில் விற்பனையாகும். ஏலத்தில் விலை கேட்போர் இப்பொருட்களை 1973.02.22 காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் பார்வையிட முடியும். விலை கேட்டலில் சித்தியடைவோர் கொடுப்பனவை உடனடியாகக் காசாகக் கொடுத்துப் பொருட்களையும் உடனடியாக அகற்றிக் கொள்ள வேண்டும்.

1. தட்டெழுத்துப் பொறி (ஆங்கிலம்) றெமிங்டன் ... 1
2 சைக்கிள் (மொனரு) ... ... 1
3. மணிக்கூடு (மேசைக் கடிகாரம்) ... ... 1
4. விருந்தைக் கதிரை ... ... 1
5. மழைச் சட்டை ... ... 1
6. மோட்டர்க் கார் தயர்கள், பல்வேறு அளவுகள் ... 46
7. மோட்டர்க் கார் ரியூப்புக்கள், பல்வேறு அளவுகள் ... 10
8. ஆமைப்பூட்டு 1½" ... ... 1

ஹர்ஷா விக்கிரமசிங்க,
செயலாளருக்காக.

கப்பற்றொழிற் சுற்றுலா அமைச்சு,
54, சதாம் வீதி,
அ. பெ. எண் : 576,
கொழும்பு 1,
1973 சனவரி 30 ஆம் திகதி.

2-506—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### பிரசித்த ஏல விற்பனவு

1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் திகதி முறபகல் 10 மணிக்கு அங்கொடை தொற்றுநோய் வைத்தியசாலையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட நோயாளிகளின் உரிமைகோராப் பொருட்கள் ஏலவிற்பனவு செய்யப்படும்.

2. இவ் ஏல விற்பனையை எதுவித கேள்விக்கிடமின்றி நிராகரிப்பதற்கோ அல்லது விற்பனையை பிற்போடவோ சௌக்கிய அதிகாரிக்கு உரிமை உண்டு.

3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் ஏலவிற்பனை முடிந்ததும் நோயாளிகளின் பொருட்களுக்குரிய முழுத்தொகையைக்கட்டி பொருட்களை உடனே அகற்றிச்செல்லவேண்டும்.

4. இங்கு குறிப்பிட்ட பணம் அல்லது பொருட்களை பெற்றுக் கொள்ளும் உரிமை உடையோர், இவ்விளம்பரம் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிட்ட ஏழு நாட்களுள் விண்ணப்பிக்கல் வேண்டும், இல்லையேல் உரிமை கோராப்பணம் வருமானமாக அறவிடப்படும். உரிமை கோராப் பொருட்கள் ஏலத்தில் விற்பனவாகும்.

5. மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை அதிகாரிக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். டி. எம். பெர்ணண்டோ,
அத்தியட்சகர்,
கொழும்புக் கூட்டு வைத்தியசாலைகள்.

பெரியாஸ்பத்திரி,
கொழும்பு:
1973.1.30

| | பெயர் | சேர்த்த திகதி | பொருளின் இலக்கம் | பணம்/உரிமைகோராப் பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1. | மேரி அக்னெஸ் | 1961. 8.20 | 31 | ஒரு சங்கிலி, வெள்ளைநிறம் |
| 2. | எல். சில்வா | 1961. 8.28 | 35 | இரண்டு தோடுகள், மஞ்சள் நிறம் |
| 3. | எலிசாகாமி | 1961. 12. 8 | 295 | இரண்டு தோடுகள், மஞ்சள் நிறம் |
| 4. | ஜெசினு பெரேரா | 1961. 10.28 | 319 | இரண்டு தோடுகள், மஞ்சள் நிறம் ஒரு மோதிரம், வெள்ளை நிறம் |
| 5. | சொனெகாமி | 1963. 8.17 | 362 | இரண்டு திறப்புகள், ஏழு ஊசிகள் ஒரு சங்கிலி, வெள்ளை நிறம் வெற்றிலைப்பை |
| 6. | என். எடிரிசிங்க | 1962.11.24 | 367 | ஒரு பென்டன்ற் மஞ்சள் நிறம் |
| 7. | கே. எ. லீலாவதி | 1962. 7.20 | 360 | ஒரு ரலிஸ்மன் டிஷ |
| 8. | எஸ். ரெங்கசாமி | 1962.12. 4 | 369 | ஒரு ரலிஸ்மன் டிஷ |
| 9. | எஸ். பிரம்பிசினுனோ | 1961.12.27 | 332 | ஒரு ரலிஸ்மன் டிஷ |
| 10. | ஆர். எ. பொடினோனு | 1961.12.10 | 328 | இரண்டு தோடுகள் டிஷ |
| 11. | லூசி பெரெரா | 1963. 7 .7 | 393 | இரண்டு தோடுகள் டிஷ |
| 12. | ஆர். எ. டபிள்யு. பீரான்சினுகாமி | 1967 .3.29 | — | இரண்டு தோடுகள் டிஷ<br>இரண்டு மோதிராம் டிஷ<br>ஒரு சங்கிலி டிஷ<br>ஒரு காப்பு டிஷ |
| 13. | எல். செல்லத்துரை | 1963 .7.20 | — | ஒரு கை மணிக்கூடு |
| 14. | கறலயீன் பின்ரோ | 1963.12 .3 | — | இரண்டு காப்புகள், வெள்ளை நிறம் |
| 15. | ஜறீன் நெல்சன் | 1963 .3 .6 | 385 | இரண்டு தோடுகள், மூக்குக்கண்ணாடியும் கூடும் |
| 16. | மேரினோனு | 1964 .1.19 | 412 | இரண்டு தோடுகள், மஞ்சள்நிறம் |
| 17. | ஈ. டி. கேறத்சிஞ்ஞோ | 1965 .3 .2 | 444 | ஒரு மோதிரம், வெள்ளைநிறம் |
| 18. | — | — | 545 | இரண்டு தோடுகள், மஞ்சள் நிறம் |
| 19. | மார்டின் பீறிஸ் | — | 546 | இரண்டு ரூபாய் |
| 20. | எ. மிஸ்கின் | — | 548 | ஆறு ரூபாய் |
| 21. | ஜே. எஸ். பெரேரா | 1969 .3.21 | 575 | இரண்டு தோடுகள் மஞ்சள் நிறம் |
| 22. | ஜே. பொடிகாமி | — | 598 | இரண்டு தோடுகள், மஞ்சள் நிறம், சிகப்புக்கல்லுப்பதித்தது |
| 23. | ஈ. விக்கிரமசிங்க | — | 603 | இரண்டு ரூபாய் |

2-551—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### டி. சொய்சா பெண்கள் வைத்தியசாலை, கொழும்பு
### பொது ஏலவிற்பனை

கீழ்க் காணப்படும் பொருட்கள் 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் திகதி காலை 10 மணி தொடக்கம் இயன் மருத்துவப் பாடசாலையில் (றீயன்ற் வீதி, கொழும்பு) பிரசித்த ஏலவிற்பனையில் விடப்படும்.

#### பொருட்களின் அட்டவணை

1. தரை மின்துலக்கி—1,
2. அலடின் மேசைவிளக்கு—1
3. 'ஸ்பிரிங்' தராசு—1
4. பெற்றோமக்ஸ் விளக்கு—1,
5. மோட்டார் ரயர்—2,
6. மோட்டார் ரயர் ரியூப்—2,
7. சுவர் மரபிறக்கட் செம்புக் கொழுக்கிகளுடன்—1,
8. மின்சார மூன்றுபின் மேல்மூடி—1,
9. அரிக்கன் விளக்கு—2,

ஏலவிற்பனையில் பொருட்களை வாங்கத் தகுதி பெற்றோர் உரிய பணத்தை முழுத்தொகையாகக் கட்டி பொருட்களை உடனடியாக அகற்றிச் செல்ல வேண்டும்.

சுகாதார சேவை அத்தியட்சகருக்கு ஏலவிற்பனையைக் கைவிடவோ, பின்போடவோ அல்லது விலைகேட்கப்படும் ஏதாவது ஒரு பொருளைக் கொடுக்க மறுக்கவோ உரிமையுண்டு.

இப்பொருட்கள் சொயிசா, பெண்கள் வைத்தியசாலை பண்டகசாலையில் 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ம் திகதி காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் பொதுசனப் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

மேலும் தகவல்கள் பெறவிரும்புவோர் சொயிசா பெண்கள் வைத்தியசாலை காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும்.

எஸ். டி. எம். பெர்ணண்டோ,
அத்தியட்சகர்,
கொழும்புக் கூட்டு வைத்தியசாலைகள்.

பிரதான வைத்தியசாலை,
கொழும்பு.
1973.1.29.

2-486—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

## பிரசித்த ஏல விற்பனை

1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ம் திகதி முற்பகல் 10 மணிக்கு த சொய்சா பெண்கள் வைத்தியசாலையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட நோயாளிகளின் உரிமைகோராத பொருட்கள் ஏலவிற்பனவு செய்யப்படும்.

2. இவ் ஏல விற்பனையை எதுவித கேள்விக்கிடமின்றி நிராகரிப்பதற்கோ அல்லது விற்பனையைப் பிற்போடுவதற்கோ சௌக்கிய அதிபருக்கு உரிமை உண்டு.

3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் ஏல விற்பனை முடிந்ததும் பொருட்களுக்குரிய முழுத் தொகையைக் கட்டிப் பொருட்களை உடனே அகற்றிச் செல்லவேண்டும்.

4. கீழ்க்குறிப்பிட்ட பணம் அல்லது பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை உடையோர் இவ்விளம்பரம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிட்ட ஏழு நாட்களுள் விண்ணப்பித்தல் வேண்டும். இல்லையேல் உரிமைகோராப் பணம் வருமானமாக அறவிடப்படும். உரிமைகோராப் பொருட்கள் ஏலத்தில் விற்பனவாகும்.

5. மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை அதிகாரிக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். டி. எம். பெர்னாண்டோ,
அத்தியட்சகர்,
கொழும்புக் கூட்டு வைத்தியசாலைகள்.

பெரியாசுப்பத்திரி,
கொழும்பு.,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 30 ந உ.

| | பெயர் | சேர்த்த திகதி | பொருளின் இலக்கம் | பணம்/உரிமைகோராப் பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1. | அன்போநோனா | 4. 2.1952 | 2/1956 | இரண்டு தோடுகள் மஞ்சள் நிறம் |
| 2. | புஞ்சிநோனா | 7. 2.1956 | 3/1956 | ஏழு காப்புகள்,—வெள்ளிநிறம், மூன்று மோதிரங்கள்,—செப்புநிறம், ஒரு ரலிஸ்மன்,—மஞ்சள்நிறம், இரண்டு தோடுகள்,—மஞ்சள் நிறம். |
| 3. | ஜீ. ரொஸ்லின்நோனா | 27. 4.1959 | 17/1959 | இரண்டு தோடுகள்,—மஞ்சள் நிறம், இரண்டு காப்புகள்,—வெள்ளி நிறம். |
| 4. | புஞ்சிமெனிகே | 2.11.1959 | 22/1959 | இரண்டு தோடுகள்,—மஞ்சள் நிறம். |
| 5. | அலிஸ் சேனாரத்ன | 14. 3.1964 | 29/1964 | இரண்டு தோடுகள்,—மஞ்சள் நிறம் (செப்புச் சுரைகள்). |

2–552—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

## பிரசித்த ஏல விற்பனை

1973 ம் ஆண்டு எப்ரல் மாதம் 3 ம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கொழும்பு பிரதான வைத்தியசாலையில் கீழ்க்குறிப்பிட்ட நோயாளிகளின் உரிமை கோராப் பொருட்கள் ஏலவிற்பனவு செய்யப்படும்.

2. இவ் ஏல விற்பனையை எதுவித கேள்விக்கிடமின்றி நிராகரிப்பதற்கோ அல்லது விற்பனையை பிற்போடுவதற்கோ சௌக்கிய அதிகாரிக்கு உரிமை உண்டு.

3. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர் ஏல விற்பனை முடிந்ததும் நோயாளிகளின் பொருட்களுக்குரிய முழுத் தொகையைக் கட்டிப் பொருட்களை உடனே அகற்றிச் செல்லவேண்டும்.

4. இங்கு குறிப்பிட்ட பணம் அல்லது பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையுடையோர், இவ்விளம்பரம் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட்ட ஏழு நாட்களுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இல்லையேல் உரிமைகோராப் பணம் வருமானமாக அறவிடப்படும். உரிமைகோராப் பொருட்கள் ஏலத்தில் விற்பனவாகும்.

5. மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை அதிகாரிக்கு விண்ணப்பிக்கவும்.

பிரதன வைத்தியசாலை,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 02 ந உ.

எஸ். டி. எம். பெர்னாண்டோ,
அத்தியட்சகர்,
கொழும்புக் கூட்டு வைத்தியசாலைகள்.

| | பெயர் | சேர்த்த திகதி | பொருளின் இலக்கம் | உரிமை கோராப் பொருட்கள்/பணம் |
|---|---|---|---|---|
| 1. | தர்மதாசா | 2. 1.1966 | 34262 | ஒரு மோதிரம், 9 கற்கள் பதித்தது, வெள்ளை, நீலநிறங்கள். |
| 2. | நோறிஸ் | 18. 2.1967 | 10520 | ரூபா 6.35 சதம்— வைப்புக்கணக்கில் இடப்பட்டது. |
| 3. | பீ. ஏ. கென்றிக் சில்வா | 11. 3.1967 | 14201 | ரூபா 1598,03 சதம்—வைப்புக்கணக்கில் இடப்பட்டது. |
| 4. | பெயர் தெரியவில்லை | 8. 7.1969 | 236711 | ரூபா 1.65 சதம்—ஒரு மஞ்சள் நிற மோதிரம், ஒரு வெள்ளைக் கல் பதிக்கப்பட்ட மோதிரம். |
| 5. | பெயர் தெரியவில்லை | 4. 1.1970 | 263012 | ரூபா 30—வரவுக் கணக்கிலிடப்பட்டது, ஒரு மஞ்சள் நிற மோதிரம், ஒருகைக் கடிகாரம். |
| 6. | டபிள்யு. எம். டிங்கிரிபண்டா | 25. 9.1967 | — | ரூபா 10.07 சதம்—வரவுக் கணக்கிலிடப்பட்டது. |
| 7. | வில்லியம் அப்புகாமி | 7.12.1970 | 358402 | ரூபா 40.85 சதம்—சிறுப்பர் வசம் உள்ளது. |
| 8. | பெயர் தெரியவில்லை | 27. 3.1971 | 5/39749 | ரூபா 54.51 சதம்—சிறுப்பர் வசம் உள்ளது. |

2–557—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### சுகாதாரப் பகுதி

*பிரசித்த ஏல விற்பனை—புனருத்தாரண வைத்தியசாலை, ருகம*

ருகம, புனருத்தாரண வைத்தியசாலையில் உள்ள 63 பழைய பொருட்கள் 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்களை வாங்குவோர், பணம் முழுவதும் உடனே கொடுத்துப் பொருட்களை அப்புறப் படுத்த வேண்டும்.

ஏலத்தில் இடப்பட்ட பொருளின் கூறு விலையை ஏற்கவோ மறுக்கவோ அல்லது விற்பனையைப் பிற்போடவோ அல்லது நிற்பாட்டவோ சௌக்கிய அதிபருக்கே உரித்தாகும்.

இப்பொருட்கள் மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் திகதி முற்பகல் 8 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையே பார்வைக்கு வைத்திருக்கப்படும்.

மேலும் விபரங்கள் ருகமை புனருத்தாரண வைத்தியசாலை பிரதம உத்தியோகத்தரிடமிருந்தும் எனது காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். டி. எம். பெர்னாண்டோ,
அத்தியட்சகர்,
கொழும்புக் கூட்டு வைத்தியசாலைகள்.

பெரியாஸ்பத்திரி,
கொழும்பு 8,
1973.1.25.

2-503—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி .. | 5.1.73 | வெள்ளி .. | 27.12.72 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி .. | 3.1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி .. | 10.1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி .. | 17.1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| பெப்புருவரி .. | 2.2.73 | வெள்ளி .. | 24.1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி .. | 31.1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் .. | 7.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி .. | 14.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| மாச்சு .. | 2.3.73 | வெள்ளி .. | 21.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 28.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி .. | 7.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 14.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 21.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் .. | 6.4.73 | வெள்ளி .. | 28.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 18.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.